திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 200 நிரந்தரத் தொழிலாளர்களும், 200 தற்காலிகத் தொழிலாளர்களும், 10 ஆய்வாளர்கள், அதிகாரிகள் பணியாற்றியிருக்கிறார்கள், அவர்கள் செய்த பணிக்காக சம்பளம்கூட வழங்கப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதிலே ஒரு தொழிலாளர் மட்டும் மனு தாக்கல் செய்து, 4 ஆயிரம் ரூபாயை சம்பள பாக்கி தரவேண்டும் என்று உத்தரவிட்டும், இன்று வரை அந்த நிர்வாகம் அதை வழங்காத சூழ்நிலை இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே தொழிற்சாலைகள் ஏதும் நிறைய இல்லை. ஒன்றே ஒன்று, ஆலங்குடியிலே இருக்கின்றது. எனவே, இந்த நிஜாம் பேப்பர் மில் விரைவிலே துவங்குவதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் தங்களுக்கு உரிய சம்பளப் பாக்கிக்காக சம்பளப் பட்டுவாடா சட்டத்தின் கீழ் அவர்கள் உரிய வழக்குகளைத் தொடர்ந்தால், அதைப் பெற்றுத் தருவதற்கு அரசு உரிய வழிவகைகளைச் செய்து தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு மற்றும் வினாக்கள் குறித்து.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாங்கள் நிறைய கேள்விகளைக் கேட்டிருக்கிறோம். அந்தக் கேள்விகள் எல்லாம் இந்தக் கூட்டத் தொடர் முடிவுறுகிறபோது, அவைகள் எல்லாம் முடிவு அடைகிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். இன்றைய தினம் இப்பேரவைக் கூட்டத் தொடரினுடைய கடைசி நாள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஏராளமான கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களில் பெரும் பகுதியானவற்றுக்கு பதில் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் இரண்டு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்து வந்திருக்கிற காரணத்தால், எடுத்தவை போக, பதில் வந்திருக்கிற எல்லா கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்களும் பேரவை முன்னர் இன்று வைக்கப்பட்டு இருக்கின்றன. இது தவிர இன்னும் பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு துறையிலிருந்து பதில் வராத நிலைமை இருக்கிற காரணத்தால், நாம் கடைபிடித்து

வருகிற மரபுப்படி அந்தப் பதில்கள் பெறப்பட்டவுடன் உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடிய மட்டும் பேரவை முடிவதற்குள், இந்தப் பேரவைக் கூட்டத் தொடரில் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குத் துறையினர் பதில் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்கள் வற்புறுத்தி அவற்றைப் பெறவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) உங்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு எல்லாம் பதில் வந்தவுடன் அனுப்பி வைக்கப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி: தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கும்போது, இவ்வளவு நாட்களுக்குள் அதற்கு பதில் வரவேண்டும் என்று ஏதாவது விதி இருக்கிறதா என்பதைத் தயவு செய்து தாங்கள் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 7 நாட்களுக்குள் வரவேண்டும் என்று இருக்கிறது. இருந்தாலும், ஏராளமான கவன ஈர்ப்புத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு எல்லாம் பதில் பெற்றுக் கொண்டிருந்தாலும் கூட, இன்றைக்கேகூட இரண்டு வைத்தது போக, மிச்சம் உள்ள அனைத்திற்குமேகூட, பதில்களைப் பெற்று இன்று பேரவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் குறிப்பாக, பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் கொடுத்த சில பிரச்சினைகளுக்கு விதிமுறைகளின் படி, இன்று வைக்க முடியவில்லை. அதெல்லாம், நாளையிலேயிருந்து அவர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பி வைக்கப்படும், எனவே, உங்களுடைய பிரச்சினைகள் அந்தந்தத் துறைக்குச் சென்று உரிய நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு உரிய பதில்கள் வந்தவுடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். கேள்விகளைப் பொறுத்த மட்டில் இதுவரையிலே வந்த கேள்விகளுக்கு உரிய பதில் இன்று பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-50

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 52-ன்படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக

மாற்றப்பட்டு, அதற்கேற்ப சம்பந்தப்பட்ட அமைச்சரால் அளிக்கப்பட்டுள்ள விடைகள் அவைமுன் வைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது 30—4—1993 அதாவது இன்றைய தேதிய நடவடிக்கைக் குறிப்புகளில் இடம் பெறவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்களுக்கு இங்கே டேபிளில் வைக்கப்படவில்லை. லைப்ரரியில் வைக்கப் பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அது எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அவைகளுடைய பதில்களை நாங்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பிரிண்ட் ஆன வுடன் உங்களுக்கு வழங்கப்படும் அதைத்தான் நான் உங்க ளுக்கு ஏற்கெனவே சொன்னேன். இதிலே நடைமுறைச் சிக்கல் இருக்கிற காரணத்தாலே பேரவைமுன் டேபிளிலே வைக்கப்படவில்லை. நூலகத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நூலகத்திலே வைக்கப்பட்டுள்ளவற்றின் நகல்கள் ஒவ்வொன்றும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பெறும். உங்கள் கையிலே இப்போது இல்லையே தவிர, அது உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

4. உரிமைப் பிரச்சினைகள்— தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் வெளியார் சிலரால் தாக்கப்பட்டது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சட்டமன்ற உறுப் பினர் விடுதி வளாகத்தில் வெளியார் சிலரால் தாக்கப்பட் டது குறித்து 12—3—1993 அன்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இன்னும் 17 சட்டமன்ற உறுப்பினர்களும் பேரவை விதி 219-ன் கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியிருந்தார்கள். அப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி 31—3—1993 ஆம் நாளுக்குள் குழுவின் அறிக்கையை அவைக்கு அளிக்க வேண்டுமென்று திரு. சோ. இராசாராமன் அவர்களும் ஒரு கடிதம் கொடுத்து இருந்தார்கள்.

இப்பிரச்சினை குறித்து 12—3—1993 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அவையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்கள்:

''காவல் துறை தகவல் எனக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.